**இலங்கை சுனாமிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றுதல் ரீதியிலான கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவ செயற்திட்டம் - 2015**

---

இலங்கை சுனாமிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் பங்குபற்றுதல் ரீதியிலான கரையோர வலய மீளமைப்பு மற்றும் நிலைபேறான முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 யூலை 23 ஆம் திகதிய ஜீஎஸ்எவ்-எவ்எஸ்பி-5-எல்கே இலக்க மானிய உடன்படிக்கையின் உறுப்புரை V இன் 5.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. எனினும், 2012 ஏப்ரல் 04 ஆந் திகதி மானிய உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகப் பெயரிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு மாற்றப்பட்டிருந்தது. இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் நிரந்தர வாழ்வாதாரத்திற்கும் காலநிலை மாற்றங்களிலான பாதிப்புக்களைக் குறைப்பதற்கும் ஆதரவளிப்பதற்கான மீள்கட்டமைப்பு செயன்முறைக்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட உலகளாவிய ரீதியில் முக்கியத்துவமான உயிர்வாழ் சுற்றாடல் முறைமையின் பிரதான மீளமைப்பும் முகாமைத்துவ பாதுகாப்புமே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 14.84 மில்லியனாக இருந்ததுடன் இது ஐ.அ.டொலர் 7.27 மில்லியன் உலகளாவிய சுற்றாடல் வசதி நிதியையும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்து ஐ.அ.டொலர் 7.08 மில்லியன் பங்களிப்புடன் ஐ.அ.டொலர் 7.57 மில்லியனுடன் உலக பாதுகாப்பு சங்கத்திடமிருந்து ஐ.அ.டொலர் 0.06 மில்லியன் தொகையையும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஐ.அ.டொலர் 0.43 மில்லியன் தொகையையும் உள்ளடக்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 செப்தெம்பர் 10 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2015 செப்தெம்பர் 10 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியலபடுத்தியிருந்தது. பின்னர் செயற்திட்ட காலம் 2016 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1. அபிப்பிராயம்

--------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்கள் மற்றும் செயற்திட்டக் கணக்காய்வுகளிற்கான ஐஎவ்ஏடி வழிகாட்டிகள் என்பவற்றிற்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதும் 2015 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதி - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்தப்பட்ட நிதி - 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ. டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடை முகவர்கள் | 14.41 | 1,929.10 | 270 | 1.33 | 180.63 | 4.04 | 528.26 |
| ஜிஓஎஸ்எல் | 0.43 | 55.90 | 30 | 0.04 | 6.22 | 0.15 | 20.80 |
| மொத்தம் | 14.84 | 1,985.00 | 300 | 1.37 | 186.85 | 4.19 | 549.06 |

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மானியமளிக்கும் முகவர்களால் ஒதுக்கப்பட்ட ரூபா 1,929.10 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 14.41 மில்லியன் மொத்த மானிய பெறுவனவுகளில் ரூபா 528.26 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.04 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 05 ஆண்டுகள் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 வரை செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே எஞ்சியிருக்கும் ஒரு வருட செயற்பாட்டுக் காலத்தின் போது மானியப் பெறுவனவுகளை பயன்படுத்தும் சாத்தியத்தன்மை சந்தேகத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

### 3.2 பௌதீகச் செயன்முன்னேற்றம்

முக்கியமான கரையோர உயிர்வாழ் சுற்றாடல் முறைமைகளின் செயற்திறனான மீளமைப்பிற்கும் நிலைபேறான முகாமைத்துவதிற்குமான சிறந்த நடைமுறைகளை அபிவிருத்தி செய்தலும் காட்சிப்படுத்துதலும், ஆக்கபூர்வமான உயிர்வாழ் சுற்றாடல் முறைமையின் மீளமைப்பையும் நிலைபேறான முகாமைத்துவத்தையும் முக்கியத்துவப்படுத்தல், கரையோர சமூகத்தையும் கற்றல், மதிப்பீடு செய்தல் மற்றும் கடைபிடித்தல் முகாமைத்துவத்தையும் மேம்படுத்தல் என்பவற்றை செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கைகள் உள்ளடக்கியுள்ளன. ஆகவே, மேற்கூறிய பிரதான நடவடிக்கைகளின் கீழ் 71 உப செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தததுடன் அவற்றில் 60 உப செயற்பாடுகள் மாத்திரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2015 திசெம்பர் 31 வரை அமுல்படுத்தப்பட்ட உப செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டம் ரூபா 3.4 மில்லியன் மொத்த கிரயத்தில் வாகரையில் உயிரின சுற்றாடல் பூங்காவை நிர்மாணித்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை பிரதேச செயலகத்திற்கு 2014 திசெம்பர் 26 ஆந் திகதி கையளித்திருந்தது. எனினும், உயிர்

வாழ் சுற்றாடல் முறைமையை மீளமைப்பது தொடர்பாக பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக பூங்கா பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகரைப் பிரதேசத்தில் 36 விவசாயக் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நலன் பெறுனர்களுக்கு பகுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வகையில் வாகரைப் பிரதேச செயலகத்திற்கு 2015 செப்தெம்பர் 29 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 1.80 மில்லியன் தொகை உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் சமுர்த்தி வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) மட்டக்களப்பு கடல் ஏரியின் எல்லையை நிர்ணயிக்கும் உப செயற்பாட்டின் கீழ் 09 பிரதேச செயலகப் பிரிவுகளின் பிரதேசங்களை உள்ளடக்கும் மட்டக்களப்பு கடல் ஏரியைச் சுற்றி 12,800 கொங்கிறீட் தூண்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 31.7 மில்லியன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் 03 ஒப்பந்தங்களை செயற்திட்டம் வழங்கியிருந்தது. எனினும் எல்லை நிர்ணயிக்கும் நடவடிக்கைகள் 2015 யூன் 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 5,759 கொங்கிறீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 17 மில்லியன் தொகையான ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படவிருந்த கொக்கிளாயிலுள்ள கடலேரி முகாமைத்துவக் குழுவினைப் பலப்படுத்துதல் தொடர்பான உப நடவடிக்கையானது கடலேரி மீன்பிடிச் சங்கத்திற்கான கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக பொருத்தமான காணித்துண்டு கிடைக்காமையின் காரணமாக பின்னர் கைவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 4 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் குச்சவெளி பிரதேசத்திலுள்ள மக்களுக்காக மழை நீர் சேகரிப்பு தொடர்பாக அமுல்படுத்தப்பட்ட உப நடவடிக்கையும் குறித்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட கொங்கிறீட் நீர் தாங்கிகளைப் பயன்படுத்துவதற்கு நலன்பெறுனர்கள் மறுத்ததனால் கைவிடப்பட்டிருந்தது.

(உ) கிண்ணியா நகரசபைக்கு ஒருங்கிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 7.2 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலவு செய்திருந்த போதிலும் குப்பைகளை எடுத்துச் செல்வதற்கு உழவு இயந்திரங்கள் மற்றும் கொம்பக்டர்கள் போன்ற சொத்துக்களின் பற்றாக்குறை காரணமாக நகரசபையினால் திருப்திகரமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.